காஞ்சி

ஞாயிறு மலர்

28.10.67

A. கிருட்டிணன் M.L.A. (மங்களூர்)

A. கோவிந்தராசன் M.L.A. (புவனகிரி)

M. சின்னையன் M.L.A. (கண்டமங்கலம்) (தனி)

விலை 20 காசு

29-10-67

5-11-67ல் வருகிறது!

காஞ்சி 3-ம் ஆண்டு மலர்

அறிஞர் அண்ணா

அவர்களின்

★ உங்களை நம்பித்தான் நண்பர்களே!

★ பொற்காலம் காண்போம்!

★ காந்தி வழி நடப்போம்!

முதலான கட்டுரைகள்!

நீண்ட நாடகம்

'தம்பிக்கு' (மடல்)

தமிழர்தம் வேட்கை!	—சட்ட அமைச்சர்
ஒத்துழைக்க வாரீர்!	—அரிசனநல அமைச்சர்
காஞ்சியும் வாஞ்சையும்	-உள்ளாட்சி அமைச்சர்
முன்னேற்றப் பாதை!	—சுகாதார அமைச்சர்
வரலாறு காட்டும் வழி நடப்பீர்!	—என். வி. என்.

ஆகிய கருத்தோவியங்கள்!

தென்னரசு—சபரி

ஆகியோரது சுவையான சிறு கதைகள்.

சுரதாவின் கவிதை ஓவியம்!

பாலும் தெளிதேனும் பாகும் கலந்த படையல் இது!

பதிவு செய்துகொண்டீர்களா?

விலை ஒரே ரூபாய்தான்!

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 29—10—67 இதழ் 14

தென்சென்னைத் தேர்தல்!

தென்சென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் பிப்ரவரி தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்கள் வேட்பாளராக நின்றதும், நாட்டின் முழுக் கவனமும் அந்தத் தொகுதியின்மீது எப்படி செலுத்தப்பட்டதோ, அதே போலவேதான் அண்ணா அவர்கள் ராஜினாமா செய்ததனால், நவம்பர் 7ல் நடைபெறுகிற இடைத்தேர்தலிலும் முரசொலி மாறன் அவர்களது வெற்றியின்மீது நாட்டின் முழுக் கவனமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

எவரெவரோ எட்டுப் பேர், இந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் முக்கியமாக கழக வேட்பாளர் திரு. முரசொலி மாறன் அவர்களும் காங்கிரஸ் வேட்பாளர் திரு. சி. ஆர். இராமசாமி அவர்களுமே கவனத்துக்குரியவர்களாக் காணப்படுகிறார்கள்.

இரண்டு மூன்று கிழமைகளுக்கு முன், காங்கிரஸ் வேட்பாளர் திரு. இராமசாமி அவர்கள் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திக்க வந்தபோது, தேர்தல் அமைதியாக நடைபெற போதிய பாதுகாப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அதுபோது அறிஞர் அண்ணா அவர்கள் 'எந்தக் கட்சி வேட்பாளராக இருந்தாலும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரே மேடையில் எல்லா வேட்பாளர்களும் கூடி தங்கள் தங்கள் கொள்கைகளையும், கருத்துக்களையும் கூறிவிடுவதுடன் நிறுத்திக்கொண்டால், வாக்காளர்கள் தாமாகச் சென்று வாக்களிக்கும் நிலைமையைத் தோற்றுவித்துவிட்டால், எந்தக் காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் தேர்தல் அமைதியாக நடைபெறும் வாய்ப்பு ஏற்படும் என்பதை விளக்கமாக அந்த வேட்பாளருக்கு எடுத்துக் காட்டி, காங்கிரஸ்கட்சியை, அவரால், அந்த முறைக்கு இணங்கச் செய்ய தயாரா என்று வினா விடுத்தார்கள்.

காங்கிரசைப் பொறுத்தமட்டில் வேட்பாளர் இராமசாமி தலைமையிடத்திருந்து தொலைதூரத்திலிருப்பவர். "என்ன, இராமசாமி இராஜினாமா செய்வீர்கள் இல்லையா?'' என்று கேட்டுக்கொள்ளும் நிலைமையிலேயே வைத்துக் கொள்ளப்பட்டிருப்பவர்.

அறிஞர் அண்ணா அவர்களின் வாய்மொழியை வேதமெனக் கொண்டோர் கழகத்தவர். எனவே, காங்கிரசைக் கட்டுப்படுத்தும் திறனுக்கு உரியர் அல்லர் இராமசாமி அவர்கள்.

காங்கிரசை ஒருவழிப்படுத்த வேட்பாளரால் இயலாமற் போய்விடும் என்பதனால் மட்டும் தேர்தல், அமைதிச் சூழலிலிருந்து தடம் புரண்டுவிடப் போவதில்லை.

கழகம்எந்தஒன்றையும்,நிதானமாகவேசெயல்படுத்தி—செயலில் சிந்தனையைச் சேர்த்து—சீரான முறையில் நடைபயின்றுவந்த அனுபவம் பெற்றதாகும்.

அந்த முறையில் கழக அரசின் மேற்பார்வையில், நடைபெறும் இந்தத் தேர்தலிலும் போதிய பாதுகாப்பும், அமைதியும் பேணிச் செயல்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

நேரு கொடுத்த வாக்குறுதியை—லால்பகதூர் சாஸ்திரி உறுதிசெய்த வாக்குறுதியை 1962ல் இருந்து 1967 வரையில் இதோ அதோ என்று போக்குக்காட்டிவிட்டு இப்போது அடுத்தக் கூட்டத் தொடரில் சட்டமாகிவிடும் என்று கூறுகிறார்கள்!

மொழிச் சிக்கலில் நேருகொடுத்த வாக்குறுதி, பத்திரிகையாளர்களைக் கூட்டிவைத்துக் கொடுத்தது மட்டுமல்ல—1962-ல் பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்கு, வைக்கப்பட்டு, அதன் பின்னர்தான் மக்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது.

1962 ல் மக்கள் பிரதிநிதிகள் கூடி ஒப்புதல் தந்த வாக்கிய அமைப்புகளுக்கு தங்களுக்கு ஏற்றார் போல் திருத்தம் செய்துகொள்ள இப்போதுள்ளவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

புதிய திருத்தத்தை—எந்த ஒரு மாநிலத்தையும் அலட்சியம் செய்துவிடும் அளவுக்கு ஒரு திருத்தத்தை-சேர்த்துக்கொண்டு, சென்னையில் வந்து ராஜினாமா நாடகம் ஆடுகிறார்கள், மொழிச் சிக்களுக்குத் தீர்வு காண காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதாக!

கழக வேட்பாளர் மாறன்—என்பது, மாறன் அவர்களை மட்டும் குறிப்பது ஆகாது. அவர் சார்ந்துள்ள கழகத்தையும் உள்ளடக்கியது ஆகும்.

இராமசாமியும் அப்படித்தான் என்றாலும், காங்கிரஸ் இந்தியைத் திணித்தே தீருவேன் என்று ஒற்றைக் காலில் நின்று கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கிற போது—

இந்தியை எதிர்க்கும் சக்திக்குத்தான் அதிக வலிவு தேடவேண்டும். இந்த வகையில் ஏற்கெனவே சென்றிருக்கிறது 24 பேர்களுடன் திரு. மாறன் அவர்களும் டில்லி சென்றால்தான், அதிகார ஆணவத்தை அதட்டிக் கேட்க முடியும்!

கழகம் ஆட்சிக்கு வந்த இந்த 7 மாத காலத்தில் அது நாட்டுக்குச் செய்துள்ள சாதனைகளை, பிற எந்த மாநிலத்தின் சாதனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும் கழக சாதனைகளே உயர்ந்தவை! மேலானவை! மக்களை வாழவைப்பவை! என்று வெளிநாட்டு இதழ்கள், ஏடுகள்கூட எழுதிவிட்டன.

இவ்வளவுக்கு அப்புறமும், காங்கிரஸ் இனியொரு தேர்தலில் ஈடுபட வருகிறதென்றால், நாட்டில் ஏற்படுத்த விரும்பும் அராஜகத்துக்கு வலிவு தேட வருகிறது என்பதுதான் பொருளாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள், காங்கிரஸ் வேட்பாளரிடம் குறிப்பிட்டதுபோல், தேர்தல் எதிர்காலத்தில் நடைபெறுமானால் சிறந்தவொரு முன்னுதாரணமாகத் தமிழகம் திகழும்!

திரு. மாறன் அவர்களது வெற்றிக்கு வலிவைத் தேடவேண்டியது கழகத் தோழர்கள், வாக்காளர்கள் அனைவரது பொறுப்பும், கடமையுமாகும்!

தென் ஆற்காடு மாவட்ட, சட்டமன்ற உறுப்பினர்கள்,

அ. கிருட்டிணன்; மங்கலூர்.

ஏ. கோவிந்தராசன், புவனகிரி (குஞ்சு)

எம், ராமன்; கண்டமங்கலம். (தனி)

அந்திம விளையாட்டு?

—பழநி—

அன்புள்ள நண்பா!

"தினவெடுத்ததோளரே! திறன்காட்டும் படைவீரர்களே! புறப்படுங்கள்! வீரத்தைக் காட்டும் வேளை வந்திருக்கிறது! விவேகத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது!

திண்தோள்கள் புடைக்கட்டும்! அகன்ற மார்புகள் விம்மிப் புடைத்து வீங்கட்டும்!

தாழ்ந்த தலைகளை நிமிர்த்துங்கள்! கூரிய குறி கோணாது நில்லுங்கள்!

வெறிபிடித்த புலியொன்று ஊருக்குள் புகுந்துவிட்டது; உயிரை — உடைமையை அழித்து ஆபத்தை உண்டாக்கத் தொடங்கி விட்டிருக்கிறது!

வேலுடையார், வேலெடுங்கள்!
கோலுடையார் கோலெடுங்கள்!!
வாளுடையார் வாளெடுங்கள்!!!

ஈட்டி, பிச்சுவா, கோடரி, குத்துக் கட்டை, அரிவாள் முதலான கையில் கிடைத்த ஆயுதங்களுடன் புறப்படுங்கள்! புறப்படுங்கள்! இன்றே புறப்படுங்கள்! இப்போதே புறப்படுங்கள்!

வேள்வித்தீக்குளிக்க, வீரர்களே! நீங்கள் தயாரா? போராட்டத்துக்குத் தயாரா? புலியைப் போரிட்டு வீழ்த்த நீங்கள் எல்லாம் தயார்தானா?

தெருக்களை வளைத்து, விசால வீதிகளை வளைத்து, பகுதியை வளைத்து, ஊரையே வளைத்துப் பிடிக்கவேண்டிய மகத்தானபோர்! புலியுடன் போர்! தயாரா? தயாரா?"

ஈதென்ன தோழா இப்படிப் புலம்புகிறாய்? தென் சென்னைத் தொகுதித் தேர்தலுக்குப் பணியாற்றப் புறப்படு என்று ஒரு வார்த்தை சொன்னால் போதாதா! காங்கிரஸ் புலியா? அதை வீழ்த்த வேலும் வாளும், கம்பும் கட்டாரியுமா வேண்டும்? என்று நீ கேட்க நினைக்கிறாய் இல்லையா!

இல்லை நண்பா! தென்சென்னைத் தேர்தல் பற்றி இங்கே நான் குறிப்பிடவில்லை! பின் எதற்கு இப்படிப் போராட அழைத்தனை என்கிறாய்!

சிரிப்பு வருகிறது. 67000 அடிகள் ஆழமான குழி தோண்டுவதற்குத் தேர்ந்தெடுத்துக்கொண்ட அந்த நகரை—தலைவரின் இரண்டாம் கட்டச் சுற்றுப் பயணத்துக்கு முதலாவதாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு 'என்னிடம் அப்படியான பேச்சுக்களை எதிர்பார்க்காதீர்கள் என்றுகுத்த மணிவாசங்களை ஐயோ! என்ன செய்வது? என்று ஏற்றுக்கொண்டு வெளிறிட்ட முகத்தை விசாரத்தாலா, வேதனையாலா என்றுகூடக் கூறமுடியாத சோதனைக்காளாக்கப்பட்ட அந்த நகரை — வேலூரை எண்ணி எண்ணிச் சிரிக்கிறேன்!!

"வீரர்களே! வீட்டுக் கொருவர் புறப்படுங்கள்! வேலேந்தி, வாளேந்தி புறப்படுங்கள்! எல்லையில் தொல்லை கொடுக்கத் தொடங்கிவிட்டான் நம் எதிரி!

அந்த வீணனை வீழ்த்தி வெற்றிப் புன்னகையோடு வீர உலா வருதற்குப் புறப்படுங்கள் தோழர்களே!"

என்று குரல் கேட்டிருந்தால் சிரிக்க நியாயமில்லை! சிந்திக்கவும் வேண்டியிருக்காது! கையில் கிடைத்த கம்பு, கழிகளுடன் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு வீட்டுக்கு ஒருவர் அல்ல; 'குடித்தனத்துக்கு'த் தேவையானோர் போக எஞ்சிய எல்லாருமே ஓடிப்போய் அந்த தலைவரின் முன், தலை நிமிர்ந்து நின்று, நாங்கள் தயார்! நாங்கள் தயாராகிவிட்டோம்! வழிகாட்டுங்கள் தலைவரே! விழிகாட்டுங்கள் வேந்தரே! என்று விழியால்—மொழியால் விளக்கிக் காட்டி நிற்கலாம்!

புலி புகுந்துவிட்டது! புறப்படுங்கள்!!— என்கிறார் காமராசர்!

புலி புகுந்து, ஊரை, உயிரை அழித்தால் அச்சத்துக்கு ஆட்படாத அத்துணைப் பேரும் புறப்பட்டுப் போய் புலியுடன் போராடி வீழ்த்த வேண்டியதுதான்! நியாயமும் கூட!

புலி புகுந்துவிட்டால்—

புலி புகுந்துவிட்டது—புறப்படுங்கள் என்று கூவ வேண்டியதுதான்! புறப்பட வேண்டியதுதான்!

இங்கே நண்பா! இப்படிக் கூறப்படுகிறது! புலி புகுந்துவிட்டது என்று கூறப்படுகிறது!

புரிகிறதல்லவா! கூறப்படுகிறது! அவ்வளவுதான்!

(13-ம் பக்கம் பார்க்க)

மனைவியும் குழந்தையாவாள்

[அரிமதி தென்னவன்]

“இன்னு சார்! ரிக்சா வேணுமா? எங்கே சார் போவணும்!' பொன்னனின் பேச்சில் சென்னை யின் வாடை அடித்தது டேக்சியும், டவுன் பஸ்சும் போட்டிப் போடும் சென்னையில் தன் தொழில் ஓடாது என்று அறிந்துகொண்ட பொன்னன் புதுவையைத் தஞ்சம் அடைந்தான். அதில் ஒரு நன்மையும் பொன்ன னுக்கு இருந்தது. கண்டதையும், காய்ச்சியதையும் குடித்துவிட்டு, உடலையும் காசையும் அழித்துக் கொள்வதோடு பயந்து பயந்து சாக வேண்டிய நிலையும் புதுவையில் இருக்காது அல்லவா!

புதுவைக்கு வந்து பல வருஷங்க ளானுலும், 'இன்ஞ முசியே' என்ற பிரஞ்சுக் கலாச்சார வாடை அண் டவேயில்லை அவனிடம்.

'இன்ஞ முசியே! சவாரி வாரிங் களா?' போட்டிக் குரல் கேட்டது.

'டேய் சோமாரி! இன்னுடா...? பொயிதோட 'ஏதாவது' போட்டுக் கினியா? நீ ஏறு சாமி'

வழக்கமான இந்த வம்புகளை அறிந்த விநாயகம் அதைப் பற்றி யெல்லாம் கவலைப்படாமே 'சின்னக் கடைகிட்டே போகணும். எவ்வ ளவு கேட்கிறே' என்று கேட்டார்.

'சின்னக் கடைகிட்டேன்னு......? எங்கே சார் போவணும்?'

'அதாம்பா மீன் மார்க்கட்டுக்குப் பக்கத்திலே, தரகர் கந்தசாமி வீட் டுக்குப்பா'

'எம். சி. ஆர். மன்றத்துக்குப் பக் கத்திலே இருக்காரே. அந்த கல்யா ணத் தரவுக்காரு வீட்டுக்கா...?' பொன்னனின் அபிமான நடிகரின் பெயரால் இருந்த மன்றம்தான், அந் தப் பக்கத்திலேயே அவனுக்கு நினை வில் உள்ள இடம்.

'குடுக்கிறத குடு சார்'

'அதெல்லாம் வேண்டாம்'பா, எவ்வளவு வேணும், தகராறெல்லாம் வேணும்...' வண்டியில் ஏறிவிட்ட பிறகு' நியாயத்துக்கு மேலேயே கொடுத்தாலும். 'போட்டுக் குடு சாமி' என்று தகராறு செய்யும் ரிக் ஷாக்காரர்களைப் பற்றித் தெரிந்த தால்தான் விநாயகம் இப்படிக் கரு ராகக் கேட்டார்.

'ஓர்ருவா குடு சார்'

'ஒரு ரூபாயா...?'

'இன்னு சார், இங்கேருந்து பட் டாணிக் கடைக்குப் போறதுக்கே முக்கா ரூவா; அதுக்கந்தாண்ட எம் மாந்துரம் போவணும்...? பத்துப் பைசா கொறைச்சுக்க சார்'

'சரிப்பா' என்று ஒப்புக்கொண்ட விநாயகத்தை ஏற்றிக்கொண்ட தெம் பில் பொன்னன் ரிக்ஷாவை ஓட்டி ஞன்.

காந்தி நகரில் இருந்து புறப்பட்ட வண்டி, அந்த இடத்திற்கு வந்த தும் தானகவே நின்றுவிட்டது.

'தோ வந்துட்றேன் சார்' என்று சொல்லிவிட்டுக் கொஞ்சநேரம் சென்றுவந்த பொன்னன் கொஞ்சம் தெம்போடு வண்டியை மிதித்தான்.

'சார் 'பொஸ்சியம்' அடிச்சாதான்' வண்டி வலிக்க முடியும்' தான், கள் குடித்ததைத்தான் இப்படிச் சொல் லுகிருன் என்பது விநாயகத்திற்குப் புரியாமலில்லை.

சாரம் பாலத்தை ஏறும்போது 'ரிக்ஷா' மூச்சைப்பிடித்துக்கொண்டு ஏறியது.

'சார்! நீங்க குடுத்தகாசு இதுக்கே சரியாப் போச்சு' பொன்னனின் இந்த வார்த்தை விநாயகத்திற்கு நியாய மாகவே பட்டது.

ஏதாவது பேசவேண்டுமே என்ற நினைப்பில், விநாயகம் மெல்ல பேச் சுக் கொடுக்கத் துவங்கினர்.

'உம் பேரு என்னப்பா'

'எம் பேரா சார், பொன்னன்'

'கண்ணெல்லாம் குழி விழுந்து கெடக்குதே, மத்தியானம் சாப்பிட லையா!'

'சாப்பாடா...? கொஞ்ச நேரத் துக்கு முன்னுலே போய்ட்டு வந் தேனே, அதான் எங்க சாப்பாடு' என்று சொல்லிவிட்டு சிரித்தான் பொன்னன்.

'ஏம்பா சிரிக்கிறே?'

'நாங்கள்லாம் சாப்பாடா சாப்டு றேம், ஏதோ, கஞ்சியோ தண் ணியோ குடிச்சிட்டு சாவாம இருக் கோம். இன்னு சார்! கட்சி பேச றேன்னு நெனைச்சிகிறிங்களா? அதெல்லாம் எனக்கு ஒன்னும் தெரி யாது சார்!

'ஏண்டா இப்படி கேட்டோம்னு' விநாயகத்திற்கு ஆகிவிட்டது.

'உன்னைப் பார்த்தா 'டல்லா' தெரிஞ்சுது; அதனுல்தான் கேட் டேன்,'

'அதெக் கேட்டியா சார்; மனசு சரியில்லே சார்'

'என்னப்பா மனசுக்கு? கல்யாணம் ஆயிடுச்சா உனக்கு'

'ஏன் சார்? கல்யாணம் செஞ்சுக் கிட்டா மனசு சரியிருக்காதா? அதெல்லாம் பணக்காரங்களுக்கு சார், என் பொஞ்சாதி ரொம்ப நல் லவ சார்'

'பின்ன ஏம்பா மனசு நல்லா யில்லே'

'அந்த வேடிக்கையே ஏன் கேக் றிங்க, எம்மேல அவ ரொம்ப ஆசை வச்சிருக்கா. அதான் சார் பெரிய வம்பா போச்சு.'

'பின்ன ஏம்பா மனது நல்லா யில்லே' உடனடியாகப் பொன்ன னிடமிருந்து பதில் வரவில்லை.

'நீ என்னதாம்பா சொல்றே' கண் கள் கலங்கிய பொன்னன். தனக்குத் தெரியாமல் துடைப்பதைப் பார்த்த விநாயகம் 'என்னப்பா சேதி? ஏங் கிட்டேசொல்லு! மனசிலே இருக்கற பாரமாவது குறையும்' என்று கேட் டார்.

யாரிடமாவது சொல்லி ஆற்ப வேண்டும் என்ற எண்ணம் அற

போது தான் பொன்னனுக்கு வந்திருக்க வேண்டும்.

சார்! ஒங்களை என் அண்ணனா நெனைச்சி சொல்றேன் எம் பொஞ்சாதி பார்வதி எங்கிட்ட வந்து சேந்து அஞ்சு வருசமாவுது, நான் இந்த புச்சேரிக்கு வந்த புதுசிலே இவகிட்டதான் சோறு வாங்கித் தின்னேன். அப்படியே, ஒருத்தருக்கு ஒருத்தர் புடிச்சிப்போச்சு, நடுவூட்டு தாலிக் கட்டிகிட்டோம்!

ஓ! காதல் கல்யாணமா?'

'அதுக்கு என்ன பேரோ வச்சுக்குங்க'

'கோபித்துக் கொள்ளாதே பொன்னா, நானும் காதல்கல்யாணம் செய்துகிட்டவன்தான். எவ்வளவோ எதிர்ப்பு, பெரிய பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவள், என்னைக் கட்டிக்க எல்லாத்தையும் விட்டுட்டு என் பின்னாலே வந்துட்டாள்' இதைச் சொல்லும்போது விநாயகத்தின் மனதின் ஒரு மூலையில் 'இவளுக்கா...?' என்று வினா எழும்பியது.

'இன்னா சார், பேசாமகீறிங்க?'

'ஒன்னுமில்லே பொன்னா மேலே சொல்லு'

'பார்வதியும் நானும் ரொம்ப சந்தோஷமாதான் வாழ்ந்தோம். பெரிய பெரிய ராசா ராணிகூட எங்களாட்டம் இருப்பாங்களான்னு, சந்தேகந்தான். ஆனா சார், பார்வதிக்கு மட்டும் ஏதோ ஓர் கொறை இருந்தது. அது இன்னான்னு இப்போதான் தெரிஞ்சுகிட்டேன்.

சார்! கொழந்தை இல்லேன்ற அந்தக் கொறை அவளை செல்லா அரிச்சிடுச்சி, இனிமே கொழந்தையும் பொறக்காதுன்னு முடிவுக்கும் வந்துட்டா! ஒவ்வொரு வார்த்தையும் பொன்னனின் உணர்ச்சியில் குளித்தே வந்தன.

விநாயகத்திற்குத் தலையை வலிப்பது போலவும், வயிற்றைப் புரட்டுவது போலவும் இருந்தது. இனம் புரியாத வேதனை அவரைக் குழப்பியது.

'ஏன் பொன்னா நிறுத்திட்டே'

'இன்னாத்தேசார் நான் சொல்றது. அதுக்குமேல் சொல்ல முடியலசார். என் பெஞ்சாதி, என்னை ரெண்டாங் கல்யாணம் செய்துக்க சொல்றா.....'

ஒரு சிறு பள்ளத்தில் லொடக் என்று வண்டி விழுந்தது. விநாயகம் அதிர்ந்தேவிட்டார். அதிர்ச்சி, வண்டி பள்ளத்தில் விழுந்ததாலா? அல்லது பொன்னனின் வார்த்தையைக் கேட்டதாலா?

'சார்! வண்டி பஞ்சர் ஆயிடிச்சு' இந்தக் கடையிலே ஒட்டிக்கின்னு வரேன். நீங்க வேறவண்டி பார்த்துக்கிட்டுப் போங்க.'

'பரவா இல்லே பொன்னா. கொஞ்ச நேரம் ஆனா குடி முழுகிப் போயிடாது வண்டியைக் கடையிலே விட்டுட்டு வா; ஒட்டுறதுக்குள்ளாலே அந்தக் கடையிலே 'டீ' குடிப்போம்.

இருவரும் சென்று அருகில் இருந்த கடையில் டீ குடித்துவிட்டு வந்தனர். அந்தச் சூழ் நிலையில் அந்தச் சூடான 'சிங்கள் டீ' பொன்னனுக்கு இதமாகவே இருந்தது. ஏன்...? விநாயகத்திற்கும் அப்படித் தான்!

வண்டியும் தொடர்ந்தது; விட்ட இடத்திலிருந்து பேச்சும் தொடர்ந்தது.

'சார் நீங்களே சொல்லுங்களேன். புள்ளே இல்லேங்ற ஒரு காரணந்துக்காக நான் இன்னொரு கல்யாணம் செய்துக்கலாங்களா? இப்போ உங்களையே எடுத்துக்குங்களேன், என் ரிக்ஷா ரிப்பேர் ஆயிடுச்சேன்னு வேறை வண்டியா வச்சுகிட்டிங்க? சாதாரண வண்டிக்கே இப்படி?

புள்ளே இல்லாட்டி இன்னாசார். நாளைக்குப் பொறந்துட்டுப் போவுது. பொறக்கலேன்னாதான் என்னா! உலகத்திலே எல்லாருக்கும் புள்ளையா பொறக்குது?

எல்லாத்தையும் விட்டுடுவோம்; இப்ப அஞ்சாறு புள்ளே பொறக்குது. வயசான காலத்திலே எல்லாப் புள்ளேயும் வேதியிலே போயிடுதுன்னு வச்சுக்குவோம்; அப்ப என்ன செய்யறதாம்' பொன்னனின் முகம் ஆவேசக் களஞ்சியமாக இருந்தது.

'பொன்னா! உலகத்திலே எத்தனையோபேர் இரண்டாம் கல்யாணம் செய்து கொள்றாங்களே அதே போல நீயும்...'விநாயகம் முடிக்கவில்லை,

''சார் நான் படிக்காதவன்தான். ஆனா சத்தியத்திக்குக் கட்டுப்படறவன். காலமெலாம் நம்மையே நம்பி இருக்கிற ஒருத்தியை, அற்பத்திற்காக விட்டுட்டு இன்னொருத்தியை நெனைக்கிறது...சீச்சி! ரொம்ப அசிங்கமா இருக்குது.

நமக்கும் மண்ணுக் குதிரைக்கும் வித்தியாசம் வேண்டாங்களா?

'அப்படி ஒருபுள்ளே வேணும்னா' எத்தனை அநாதைப் புள்ளைங்க கெடக்குது; ஒன்னை எடுத்து வளத்துக்கிறது.'

'என்னதான் இருந்தாலும் பெத்த பிள்ளை ஆகுமா பொன்னா?'

'என்னாங்க பெத்தபுள்ளை? நாம பாக்கலையா? எத்தனைப் புள்ளைங்க பெத்த தாயைத் தவிக்கவிடுதுங்கன்னு. இதெல்லாம் ஒரு மயக்கம் சார்.

இப்படிப் பேசியே ரொம்பநாளா பழகிட்டோம்,

'சார்! பாசம் வயித்திலே இல்லே; மனசிலேதான் இருக்கு' பொன்னனின் ஒவ்வொரு சொல்லும், அன்பில் தோய்ந்து, உறுதியில் குளித்து வெளிவந்தன.

'இன்னா சார், பேசாமஇருக்கிங்க? நான் சொல்றது உங்களுக்குத் தப்பா படுதா?'

'அதெல்லாம் இல்லேப்பா' எது சரி, எது தப்பு என்ற முடிவுக்கு வர முடியாமல், தன்னைப் பொருத்தக் காரியத்திலேயே தவிக்கும் விநாயகத்திற்கு, பொன்னனின் வார்த்தையினைத் தப்பென்றும் சொல்ல முடியவில்லை. சரியென்று ஒப்பவும் மனம் கூசியது.

வண்டி பட்டாணிக் கடையைத் தாண்டி ராஜாடாக்கீசையும் கடந்து சென்றது.

'சார், இப்போ பார்த்தோமில்லே; தப்பான வழியிலே வண்டிங்க போகாம, எல்லாரும் நல்லா இருக்கத்தானே இந்த போலீஸ்காரரும் இப்படி வேகாத வெய்யில்லே நின்னுகிட்டு, இத்தனைக் கஷ்டப் படுறாரு.

இந்தப் போலீஸ் காரராட்டந்தான் நமக்கு மனசாட்சி இருக்குது. எங்கசார் மனுஷன் மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கிறான்,

போலீஸ்காரங்க பேச்சைக் கேட்காம போனா வண்டி வாகனங்கள்லாம் ஒன்றோடு ஒன்று மோதி அழிஞ்சிப் போறாப்போலத்தான் மனச்சாட்சிப்படி நடக்காதவங்க எல்லாம் போவாங்க'

பொன்னனின் உறுதி வார்த்தைகளாக வெளிப்பட்டன.

'எல்லாம் சரி பொன்னு! ரெண்டாந்தாரம் கட்டிக்கப்போறையா? இல்லையா?'

'நீங்கதான் ஒரு யோசனை சொல்லுங்களேன். இந்தப் பேச்சில் உள்ள கேலியையும், கோபத்தையும் விநாயகம் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

பொன்னு, குடும்பம் விளங்க ஒரு குழந்தை வேணும். அதுக்காக ரெண்டாந்தாரம் கட்டிக்கிறது தப்பு இல்லே'

'அப்போ, நம்மையே நம்பி வந்தாளே அவ கதி?'

'அவளையும் நல்லபடியா வச்சுக்க வேண்டியதுதான்'

'சார்! ஒருத்தர் சாப்பாட்டே, ரெண்டுபேரு சாப்பிடறதுக்கும் இதுக்கும் என்ன வித்தியாசம்? நான் சொல்றேன்று கோவிச்சுக்காதிங்க; யாருடைய வயிறும் நெறையாதுங்களே......'

கொஞ்ச நேர அமைக்குப் பின் பொன்னனே தொடர்ந்தான்.

நீங்க சொல்றபடியே ரெண்டாந்தாரம் கல்யாணம் பண்ணிக்கிறேன், அவளுக்குக்கொழந்தைபொறக்கலே இன்னும் ஒரு கல்யாணம் பண்ணிக்கலாமா?

அப்படிப் பண்ணிக்கிட்டா கல்யாணமே கொழந்தை பெத்துக்கத் தான்னு இல்லே ஆயிடும். அப்புறம் எங்கே சார் மனசு? ஒத்துமை? தியாகம்? குடும்பம்?

சார்! குடும்பம் சினிமா வாட்டமில்லே ஆயிடும்; இந்தப்படத்திலே ஒருத்திக்குப் புருசன்; இன்னொரு படத்திலே இன்னொருத்திக்குப் புருசன்-இது இன்னுவாய்க்கை? இன்னு குடும்பம்?'

பொன்னனுடைய எந்த வார்த்தையையும் மறுத்துப் பேச விநாயகத்தாலே முடியவில்லை.

வண்டி புஸ்சி தெருவிற்குத் திரும்பியது, கடற்கரையை நோக்கி அந்தத் தெரு இருந்ததால், அந்த மாலை நேரத்தில் வீசிய காற்று விநாயகத்திற்கு இதமாகவே இருந்தது,

ஆனுல், அவருடைய மனப் புழுக்கத்திற்குப் பொன்னனுடைய ஒவ்வொரு வார்த்தையும் போதுமானதாக இல்லாவிட்டாலும், ஓரளவு குறைக்கவாவது பயன் படாமல் போகவில்லை.

அவ்வளவு வேகமாக வண்டியை மிதிக்கவில்லை பொன்னன். தன் கால் போன வேகத்திலேயே வண்டியை ஓட்டினுன்.

'இங்கே பார்சார்' பொன்னன் காட்டிய பக்கம் பார்த்தார் விநாயகம்.

'டாக்டர் ரமேஸ்'

டாக்டர் சத்தியவதி ரமேஸ்'

என்ற போர்டு ஒன்று தொங்கியது. அந்த இடம் தனக்குப் பழக்கமான இடம்தான் என்பதைக் காட்டிக்கொள்ளாமலேயே 'என்னத்துக்கு அங்கே பார்க்கச் சொன்னே' என்ருர்.

கொஞ்ச நாளுக்கு முன்னுல் ஒரு அம்மா இங்கே என் வண்டியிலே வந்தாங்க சார், அம்மா மகாலட்சுமி யாட்டமா இருந்தாங்க. அவங்களுக்கு டாக்டரம்மா ரொம்ப தெரிஞ்சவங்க போலிருக்கு, ரொம்ப நேரம் பேசிக்கிட்டிருந்துட்டு வெளியே வந்தாங்க. அப்போ, அந்த டாக்டரம்மா நான் சொன்னதை மறந்துடாதிங்க. பைத்தியக்காரத்தனமா உங்க வீட்டுக்காரருக்கு ரெண்டாந்தாரம் செஞ்சு வச்சுடாதே. உங்களுக்குக் குழந்தை இல்லாததுக்கு அவரோடு உடம்பு நிலவரந்தான் காரணம். டாக்டர் ஐயா நல்லா பரிசோதிச்சு தான் சொன்னுரு. எத்தனை கல்யாணம் செய்தாலும் அவருக்குக் குழந்தை பாக்கியம் இல்லேன்னு சொன்னுங்க.

அதுக்கு அந்த அம்மா 'இந்த விசயம் நம்மோட இருக்கட்டுங்க எங்க ஊட்டுக்காரருக்குத் தெரியவாணும்'னு சொன்னுங்க. அந்த அம்மா காந்திநகர் திரும்புறவரை, பாவம், புழுவா நெளிஞ்சாங்க.

இன்னு உலகம் சார் இது?

கொழந்தை, கொழந்தைன்னு இன்னொரு கல்யாணம் செய்ய நெனைச்சானே, அந்தப் பெரிய மனுசன், இது தெரிஞ்சா, கொழந்தை இல்லாததுக்கு நாம்தான் காரணம்'னு தெரிஞ்சா என்ன பண்ணுவான்?

கொழந்தை ஆசையை விட்டுடுவாரா?

ரெண்டாங் கல்யாண ஆசையை விட்டுடுவாரா?

பச்சையா சொல்ல முடியிலே சார்!

இதுக்கப்புறமும் கொழந்தைதான் வேணும்பாரா?

இன்னு சார் அசிங்கமா பேசறேன்னு நெனைக்கிறிங்களா?

அசிங்கம் பேச்சிலே இல்லே சார் அந்த மனுசன் செய்கையிலேதான் இருக்கு.

'பொன்னு...!' பொன்னன் திடுக்கிட்டான்.

'பொன்னு' வண்டியைத் திருப்பு.'

'கல்யாணத் தரகர் ஊட்டுக்கு இன்னும் போகனுங்களே.'

'இல்லே பொன்னு அங்கே நான் போகலே. போகவும் தேவைஇல்லே. வண்டியைத் திருப்பு.

வண்டியைத் திருப்பினுன் பொன்னன்.

'இந்தா பொன்னு பணம்; ஒரு ரூபா இருக்கு; எடுத்துக்கோ; பஸ் ஸ்டாண்டிலே நிறுத்து. டவுன் பஸ்சிலே வீட்டுக்குப் போகிறேன்.'

'நல்லது சார், என்னப்பத்தி இன்னுசாமி நெனைக்கிறே. நான் என் பொண்டாட்டிப் பேச்சைகேட்டு ரெண்டாந்தாரம்....' பொன்னன் முடிக்கவில்லை.

'வேண்டாம் பொன்னு; அந்தப் பாவத்தைச் செய்ய வேண்டாம். நீ உன் இஷ்டமாகவே நடந்துக்க. அதுதான் நல்லது; வண்டியை நிறுத்து. நான் வரட்டுமா?' விநாயகம் இறங்கி நடந்தார்.

வானத்து மங்கையின், மஞ்சள் குளித்த முகம்போல் சந்திரன் ஆகாயத்தில் தோன்றினுன்.

அந்தக் களங்கமில்லாத சந்திரன் விநாயகத்திற்குத் தன் மனைவியின் முகமாகவே பட்டது.

கணவனிடம் உள்ள குறையைச் சொல்லக்கூடாது என்பதற்காக எத்தனையோ துன்பங்களையெல்லாம் ஏற்றுக்கொண்ட தன் மனைவியை விநாயகம் நினைத்தார்.

மனைவியும், ஒருகுழந்தையாகவே பட்டது அவருக்கு. தன்னை, தன் மனைவிக்குக் குழந்தையாக்கி, மனைவியைத் தனக்குமொரு குழந்தையாக்கிய மகிழ்ச்சியில் திளைத்த விநாயகத்திற்குக் காந்திநகர் டவுன் பஸ் தன்னைக் கடந்துபோனதே தெரியவில்லை,

✿

இனித்தது, இனித்தது!!

இளங்கதிரோன்

மான் விழியாள்!

தேன் மொழியாள்!

அல்லிக் கொடியாள்!

மெல்லிடையாள்!

கொவ்வை இதழ் திறந்து வெண் முத்துப் பற்கள் தெரிய மென்னகைக் காட்டினளாயின், எட்டிப் பிடித்துத் தொட்டிழுத்து கட்டியணைத்துச் சுவைத்திட எத்தனையோ இளைஞருலகம் காத்துக் கிடந்தது!

ஏங்கும் இதயங்களுக்கெல்லாம் அவளோர் கிட்டாக் கனவுக் கன்னியாகத் திகழ்ந்திட்டாள்!

அவள் மையலில் மயக்குற்று எத்தனையோ கட்டிளங் காளையர் மனதை இழந்துத் தவித்ததுண்டு! சிலர் அவளிடம் சில்லறை விளையாட்டு விளையாட எண்ணி, கன்னத்தில் கன்னியவளின் கரத்தால் சூடேற்றிக்கொண்டதுமுண்டு!

ஆண்களில் பலர் அவளிடம் நெருங்க அஞ்சிக் கிடந்த போழ்து, வஞ்சி அவளிடம் துணிந்தொருவன் கொஞ்சிப் பேசிட எண்ணினான்!

அவனோ, கட்டிளங்காளை. அரும்பு மீசையும்—குறும்புப்பார்வையும் இளமைத் துடிதுடிப்பும் கொண்டோன்!

வஞ்சியவளும் அவன் வலையில் வசமாக சிக்குண்டு, அவனுக்கே அடிமையானாள்!

அடிக்கடி துடித்திடும் அவள் நெஞ்சத்தை அவனிடத்தில் பிடித்துக் கொடுத்திட எண்ணி, மாலை வரை காத்துக் கிடந்திட்டாள்!

மாலையும் வந்தது!

மங்கையும் மலர் வனம் சென்றிட்டாள்!

காளையும் வந்திட்டான்! கைகளில் பூவொன்றைப் பறித்துக்கொண்டு. பூவையவள் கூந்தலிலும் சூடிவிட்டான்!

இருவரும் ஒருவருக்கொருவர் கைகோர்த்து, மறைவிடம் நாடிச் சென்றமர்ந்தனர்!

கோதையவள், "அத்தான்!" என்றழைத்துக் கொஞ்சினாள்!

குமரனவன், "அஞ்சுகமே!" என்று வஞ்சியவளைக் கட்டியணைத்தூட்டான்!

"உன்றன்மேல் பித்தானேன்!" என்றாள்.

"இன்றெனக்கு நீ, தித்திக்கும் தேன் ஆனாய்!" என்றான்.

"தந்தேன்!" என்றாள்.

"சுவைத்தேன்!" என்றான்.

"இத்தனைச் சுவையும் — இத்தனைச் சுகமும் இதழுடன் இதழ் பொருத்தினால், உண்டென்பதும் எனக்கித்தனை நாளாய்த் தெரிந்திலையே அத்தான்," என்றாள்.

"பூத்துக் குலுங்கும் புதுமலரில் உள்ள தேன் சுவையுடையதென்று மலருக்கெப்படித்தெரியும் கண்ணே? வண்டொன்று வந்து சுவைத்திடும் போதன்றோ அதன் பெருமை தெரியும்? அது போல், பூவை உன்றனிடத்து வெண்பற்களில் கசிந்து நிற்கும் அந்த நீரை நான் பருகிடவேண்டி, உன்றன் இதழுடன் என்னிதழைப் பொருத்திச் சுவைத்திடும் போதன்றோ, அதன் சுவையும்—பெருமையும்" தெரியும் என்றான்!

"ஆமத்தான்; பூக்கும் மலரினின்றும் எடுத்துச் சேர்த்த தேன் சுவையுடையதா? இப்போது நாம் சுவைத்திட்டோமே! இது சுவையுடையதா?" என்று கேட்டாள்.

"கண்ணே! தேனை தொட்டெடுத்து நாவினில் வைத்துச் சுவைத்திட்டால், சுவைக்கின்ற போழ்துதான் இனித்திடும்! ஆனால் அஞ்சுகமே! உன்றன் பற்களில் இருந்து வரும் நீருண்டே, அதனை நான் இதழுடன் இதழ் பொருத்திச் சுவைத்திட்டப்போது, அப்போதும் இனித்திடும் — இப்போதும் இனித்திடும்—எப்போதும் இனித்திடும்! இருப்பினும், என்றேனும் ஒரு நாள் தேனாகிலும் திகட்டிடும். இஃது எந்நாளும் திகட்டிடாது! நெஞ்சத்தால் நினைக்கின்ற போதெல்லாம் இனித்திடும் தன்மை வாய்ந்ததாகும்!" என்றிட்டான்.

'ஏனத்தான்! என் பற்களில் கசியும் நீர் தேனைவிடச் சுவையுள்ளதென்று பெருமையாகக் கூறுகின்றீர்களே! இதற்கீடாக வேறெதைத் தான் சொல்லமுடியும்?"

"கண்ணே! ஆவின் பாலை காய்த்தெடுத்துச் சுவைத்திட்டால், அதற்கொரு தனிச் சுவையுண்டு! அதனுடன் நறுந்தேனையும் கலந்து உண்டால், அதன் சுவையை அளவிட இயலாது! இருப்பினும் இதனை விட உன்றன் வெண் பற்களில் கசிந்தூறும் நீரானது மிக மிகச்சுவையுடையதாகும்!!'

"அத்தான்! நீங்கள்தான் ஒரு கவிஞராயிற்றே! எங்கே நாம் இப்போது அனுபவித்தோமே அந்த இன்பச் சுவைப்பற்றி ஒரு கவிதை தீட்டுங்களேன் பார்ப்போம்!" என்றாள்.

"இச்சுவைப்பற்றி இச்சகத்தில் யான் எழுதிட விரும்பேன்" என்று அவள் இதழ்க்கடையில் 'இச்' சென்று ஒன்றைத் தந்திட்டான்!

கன்னியவள் கன்னமும் சிவந்திட, "ஏன் எழுதிட விரும்பவில்லையா? அல்லது என் மீது விருப்பமில்லையா?" என்றிட்டாள்.

"என் மீது ஏனிந்தக் கோபம் கண்ணே! எனக்கு முன்னரே ஒருவர் இச்சுவைப்பற்றி எழுதிவிட்டாரே?" என்றிட்டான்.

"அப்படி எழுதியது யாரோ?" என்றாள்.

"வேறு யாராக இருக்க இயலும்! யாவும் உணர்ந்த தெய்வப் புலவரான நம் வள்ளுவப் பெருந்தகைதான்!" என்றான்.

குமரியவளும் கோபம் நீங்கி, "எங்கே அப்பாடலைக் கூறுங்க" ளென்றாள்,

குமரனவனும் வள்ளுவர் வடித்திட்டக் குறளைக் கூறினான்!

அஃது இதோ:-

"பாலொடு தேன்கலந் தற்றே
பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்!"

கணவனின் கனல்மூச்சுக் கடிதம்!

— துறவி —

இதயத்தில் நிறைந்தவளே! மனஅ ரங்கில்
எழிலோடு திகழ்பவளே! நீஎ னக்குக்
குதுகலிக்கும் உணர்வோடு எழுதி யுள்ள
கடிதத்தைப் பலதடவை படித்து விட்டு
மதுபோதை யால்உள்ளம் மயங்கு தல்போல்
மீறியெழும் மகிழ்ச்சியிலே ஆழ்ந்து போனேன்
இதழ்குவித்துத் தித்திக்கும் முத்தங்கள்நீ
எத்தனையோ தந்ததுபோல் குளிர்ந்து போனேன்

இலக்கத்தை இழந்துவிட்ட பூஜ்ஜி யம்போல்
இருக்கின்றேன் உனைப்பிரிந்து எனநீ உன்றன்
கலக்கத்தைக் கடிதத்தில் எழுதிக் காட்டிக்
கண்ணீரை மறைமுகமாய்ச் சிந்து கின்றாய்
தலைக்கோலம் தருகின்ற குழலை வெட்டித்
தந்துவிட்ட இளமங்கை போல்தான் இங்கு
பொலிவேதும் இல்லாமல் நானும் உள்ளேன்
படுக்கையினைக் கண்ணீரால் நனைத்த வாறு.

நினைக்கின்ற இடமெல்ல உட்கா ருச்ஈ
நெருங்கியுள பொருளையெல்லாம் தொட்டுச் செல்லும்
பனித்திவலை மலர்மீது மட்டும் தானே
போயமர்ந்து உறவாடும் தேனீ? நெஞ்சில்
இனிப்பவளே! உள்ளெழுதும் கல்எ ழுத்தாய்
இதயத்தில் இருப்பவளே! இநனைப் போன்றே
மனிதர்கள் அயலினிலே இருந்த போதும்
மனம்மட்டும் ராட்டினமாய் உனையே சுற்றும்!

மாலையிலே சாலையிலே மனைவி யோடு
மகிழ்ந்தபடி தோழர்கள் செல்லு கின்ற
கோலத்தைக் காணுகின்ற சமயத் தில்நான்
கொள்ளுகின்ற வேதனையை எழுதிக் காட்ட
கோலமிகு தமிழ்மொழியில் வார்த்தைத் தேடிக்
களைத்துவிட்டேன்! ஒருவரியும் கிடைக்க வில்லை!
மூலிகையாய் நீஅங்கு இருக்கின் றாய்,நோய்
முற்றிவிட்ட மனிதன்போல் நானிங் குள்ளேன்!

எத்தனையோ கனவுகளைக் காணு கின்றேன்
எப்போது உனைத்தழுவி மகிழ்வேன்'' என்று
நித்திரையே இல்லாமல் வருந்து கின்றேன்
நெஞ்சத்தைத் துயரத்தில் நீந்த விட்டு
முத்தமிட்டு முத்தமிட்டுச் சுவைப்ப தற்கு
மோகநிலாப் பனிஇரவில் நெஞ்சில் பூக்கும்!
தித்திக்கும் கற்பனையை ரசிப்ப தற்கும்
தவித்தபடி இரவுகளைக் கழிக்கின் றேன்நான்.

அந்தரங்க மாய்இரவில் தழுவிக் கொஞ்சி
அனுபவித்த காட்சிகளை நினைக்கும் போது
செந்தணலால் சுடுவதுபோல் துடிக்கின் றேன்,ஓர்
சந்தர்ப்பம் வாய்க்காதா ஓடி வந்து
சந்திக்க உனை,என்று ஏங்கு கின்றேன்
சென்னைநகர் வாழ்க்கையினைச் சபித்த வாறு
தந்துள்ளேன் விண்ணப்பம் விடுமு றைக்குத்
தந்துவிட்டால், விரைவாக வந்து நிற்பேன்

ஒளிவிளக்கு விழிக்கின்ற இரவுப் போதில்
உறங்காத விழிஇரண்டில் மயக்கம் பொங்கக்
களிப்பினிலே நீந்துகின்ற உணர்வி னோடு
கரம்தொட்டு இழுத்தணைத்து மடியின் மீது
விளையாட விட்டுனது கன்னம் மீது
விருந்துவைத்த மகிழ்வதைப்போல் ஒருநாள் கண்ட
நளினமிகு கனவின்பின் அமைதி யற்ற
நெஞ்சோடு உனைநினைத்துத் தவிக்கின் றேன்நான்

வாக்கியங்கள் தேவை மனம் வளர்க்கும் எண்ண
வேகத்தை வடிப்பதற்கு; எனது நெஞ்சின்
ஏக்கங்கள் தணிவதற்கும் இனிமை பொங்கி
இலங்குதற்கும் நீதானே எனக்குத் தேவை?
தூக்கவிழாக் காரியத்தை நினைத்த வாறு
தாங்கிஇரு இப்பிரிவை; கிடைத்து விட்டால்
சீக்கிரத்தில் விடுமுறைநான் பறந்து வந்து
சுவைதருவேன் இப்படிக்கு உனது அத்தான்!

அன்றொரு நாள்!

—[து. கன்னையா]—

அன்றொரு நாள்!

1865-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாள். அமெரிக்கநாடு எதிர்பாராத விபத்தைச் சந்தித்ததினம். அகிலத்துக்கெல்லாம் ஒளி சிந்தும் சுடர் தீபமாக அமைந்த ஆபிரகாம் லிங்கன் ஆவிபிரிந்து, அகில உலகையே சோகத்தில் மூழ்கடித்த தினம்.

பிறப்பால் ஆண்டான் அடிமை—நிறத்தால் கறுமை, வெண்மை, இவற்றால் பேதம்கொண்ட பேதலித்த மதிபடைத்தோருக்கு, ஏன், எப்படி — எதற்காக என்று கேள்விகளை அளித்து—மனிதவர்க்கத்தால் மறுக்கொணாத ஆணித்தரமான ஆதாரங்களை - விளக்கங்களை—விமர்சனங்களைஅள்ளிவீசி ஆண்டாண்டு தோறும் அமெரிக்கநாட்டில் இருந்த "அடிமை வாழ்வு" ஒன்றுக்கு ஆனந்த விடுதலை யளித்த மாவீரன் லிங்கன்—அவன் ஆவி பிரிக்கப்பட்ட தினம் 1865-ம் ஆண்டு ஏப்ரல் புதினாலாம் நாள் இரவு.

காடுகளிலே, கழனிகளிலே, கனிச் சுரங்கங்களிலே—மலைகளிலே—மலைப் பிரதேசங்களிலே தோட்டங்களிலே, துறவுகளிலே — அங்காடிகளிலே ஆழ்கடல்மீது ஊறும் கலங்களிலே—மாடுகளைப்போல், குதிரைகளைப்போல், மனித இனம் துன்புறுத்தப்பட்டு அதன் உழைப்பை உறிஞ்சி உல்லாசபுரியில் உலா வந்த வெள்ளையர்கள்—கறுப்பு நிற மனிதர்களை காராக்கிரகத்தில் இருந்து வெளிக்கொணர, லிங்கன் குரல் எழுப்பியபோது புருவத்தை நெறித்தனர்—புயலைக்—கிளப்பினர். குமுறினர் — குதர்க்கம் பேசினர். ஆனால், அஞ்சினான் இல்லை ஆபிரகாம் லிங்கன். பிறப்பால் மனித இனத்தைச் சார்ந்தவர்கள் நீக்ரோக்கள். உயிரால் ஒன்றுபட்டவர்கள். உணர்வால் வேறுபடாதவர்கள். உருவத்தால் மட்டும் சற்று மாறுபாடுகொண்டவர்கள். இதற்கா இவ்வளவு கொடுமை? அடிமை!" எனச் சிந்தித்தான், சிரித்தான்—சீறினான். சீரிய கருத்துக்களை எடுத்து இயம்பி அடிமைத்தனம் என்பது மனிதவர்க்கத்தில் இருக்கக் கூடாது என்று பட்டி தொட்டிகளிலே—படித்தவர் மத்தியிலே — பண்புடையோர் எதிரே முழக்கம் இட்டான். அவனது வாதத்தால் — மறுக்கொணாத உண்மை நிறைந்த விளக்கத்தால் அமெரிக்கா அவன் பக்கம் வந்தது. அவன் கூறியது 'சரி என்று ஏற்றது. நீண்ட தொடர்ந்த கடும் உழைப்புக்குப் பிறகு லிங்கன், நீக்ரோக்களின் மேனியைப் பிடித்து கசக்கிக் கொண்டிருந்த அடிமைச்சங்கிலியை அறுத்தெறிந்துத் தகர்த்தான். இருட்டறையில் பூட்டப்பட்டிருந்த நீக்ரோ இனம் இன்பபுரிக்கு வந்து பரமானந்தம்கொண்டது. இந்தப் பணிக்குப் பாத்திரமாயிருந்த லிங்கனை மனமாற வாழ்த்தி நாவாறப் புகழ்ந்தது, இதய முவந்த நன்றி செலுத்தி இன்பப் பண் பாடியது. அத்தகு 'பூமான் — அடிமைத் தனத்தை அறவே ஒழித்த கோமான் ஆபிரகாம் லிங்கனுக்கும் அவன் பிறந்த மண்ணில் மாற்று இருக்கத் தான் செய்தது. அமுதம் நிறைந்த இடத்தில் நஞ்சும் ஓரிடத்தில் இருக்கத்தான் செய்தது.

காலை:- 1865-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14-ம் நாள் லிங்கன் காலையிலே எழுந்திருந்ததும் நல்ல சேதியையே கேட்டான். போர்நிலைமைகள் மும்முரமாக இருந்தநிலை மாறி சமாதானச் சூழ்நிலைகள் நிலவுவதற்கான அறிகுறிகளைப் போர்த்தளபதி காலையில் வந்து தெரிவிக்க, அதைக் குறித்து மெத்த மகிழ்ந்த லிங்கனும் படைத்தளபதியும் ஆனந்தம்பொங்க களிப்பால் அளவளாவிப் பேசி மகிழ்ந்தார்கள். காலை உணவை முடித்துக்கொண்ட லிங்கன், வழக்கப்படி உலாவுவதற்குச் சென்றான். அன்று லிங்கனும் அவனது மனைவியும் வழக்கத்துக்கு விரோதமாக நல்ல முறையில் களித்து மகிழ்ந்து காலத்தைக் கழித்தனர். உலாவச் சென்றுவிட்டு திரும்பிய லிங்கன் அடுத்து மந்திரிசபைக் கூட்டத்துக்குச் சென்றான். மந்திரி சபைக் கூட்டத்தில் பல முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி விவாதம் நடந்தது. கூட்டம் முடிந்து வெளியே வரும் தறுவாயில் அமெரிக்க மாது ஒருத்தி நான்ஸிபுஷர்ட் என்பவள் லிங்கனைச் சந்தித்து, தன் கணவன் இராணுவத்தில் பணிபுரிந்துகொண்டிப்பதாகவும், படித்துக்கொண்டிருக்கும் தன் பிள்ளைகளுக்குக் கல்வி வசதிசெய்து தரவேண்டும் என்றும் கோரிக்கைகொண்ட மனு ஒன்றினை லிங்கனிடம் சமர்ப்பித்தாள். அதை ஏற்றுக்கொண்டு ஆவன செய்வதற்கான உத்திரவினை அளித்த லிங்கன், அந்தப் பெண்ணிற்கு நல்ல வார்த்தைகளைக் கூறிப் புறப்பட்டான்.

பிற்பகல்: வழக்கப்படி பிற்பகலில் சற்று ஓய்வு எடுக்கும் பழக்கத்துக்கு அடிமையாயிருந்த லிங்கன், சற்று நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டான்.

மாலை: அன்றைய ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரல் திட்டப்படி, மாலையில் அமெரிக்க போர்டு தியேட்டரில், 'அமெரிக்கன் கசின்' என்ற நாடகத்துக்கு ஜனாதிபதியின் குழு விஜயம் செய்வதாக நிகழ்ச்சி வகுக்கப்பட்டிருந்தது. லிங்கனும் அவனது மனைவியும் மற்றும் சில நெருங்கிய நண்பர்களும் அவர்களது மனைவியரும் புடைசூழ நாடக அரங்கிற்குப் புறப்பட ஆயத்தமானான் லிங்கன். ஏற்கனவே வருவதாகக் கூறியிருந்த சில நண்பர்கள் வர வசதியில்லை என்று கூறிவிட்டதால், வந்தவர்கள் மட்டும் கூடவர அமெரிக்க ஜனாதிபதியின் குழு நாட நாடகத்தைக் கண்டுகளிக்க போர்டு நாடக அரங்கை நோக்கிப் புறப்பட்டது.

மற்றொரு பக்கத்தில்: அந்த நேரத்தில் இருபத்தாறு வயது நிரம்பிய வில்லியம் வைக்ஸ்பூத் என்ற இரும்பு நெஞ்சம்கொண்ட ஒரு மனித மிருகம் மறுகோணத்தில் அமெரிக்காவின் ஜோதியை அழிக்க ஆயத்தமாகிக்கொண்டிருந்ததை அந்த கள்ளமில்லா உள்ளம்கொண்ட ஆபிரகாம் எப்படி அறிவான்? ஒரு பக்கத்தில் முளைத்தவிடிவெள்ளியை முடிவாக மறைத்துவிட, இன்னொரு பக்கத்தில் நிறவெறி கொண்ட நீச உள்ளம் மும்முரமாக முனைந்து கொண்டிருந்ததை அந்த அமெரிக்க நாட்டு மாவீரனின் குழந்தை உள்ளம் எப்படி அறிய முடியும்? நாடக அரங்கை நோக்கி நாடாளும் லிங்கன் சென்றுகொண்டிருக்கும்போதே நாசகாலன் ஒருவன், அந்த நல்லவனின் உயிரைக் குடிக்க இரத்த தாகம் கொண்டு புறப்பட்டுவிட்டதை யார் அறிவார்? மாவீரன் — உத்தமன் — மண்ணில் தோன்றிய மனித தெய்வம்—அவனை அழித்திட மனித விலங்குஒன்று மமதையோடு புறப்பட்டுவிட்டதை யாரும் அறியவில்லையே! முரண்பட்ட இரண்டு

துருவங்கள் இரு திசைகளில் ஒரே சமயத்தில் கிளம்பிவிட்டன.

ஜனாதிபதி குழு போர்டு தியேட்டரை அடைந்து அவர்களுக்கென தனியே போடப்பட்டிருந்த மாடியில் தத்தம் இருக்கைகளில் அமர்ந்தனர். நாடகக் கலைஞர்கள் ஜனாதிபதியின் வரவைக் கண்டதும் நடிப்பை நிறுத்திவிட்டு, அமெரிக்கத் தலைவனுக்கு வணக்கமும் வரவேற்பும் அளித்தனர். பின் நாடகம் தொடர்ந்தது. ஜனாதிபதி குழுவினரின் இரசிப்பு நாடகக் காட்சிகளில் இலயத்திருந்தது. லிங்கன் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மனைவியின் கரங்களைப்பற்றி வருடி, இரகசியமாகக் குறும்பு பேசினார். நாணிவிட்ட லிங்கனின் மனைவி பதிலுக்கு அவரை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு பக்கத்தில் அமர்ந்திருக்கும் நண்பர்கள் பார்த்தால் கேலி செய்யப் போகிறார்கள் என்றாள். லிங்கன் மெதுவாகச் சிரித்துவிட்டு இதெல்லாம் சகஜம். அவர்களும் நம்மைப்போல மனிதர்கள்தானே என்று புன்னகைபூத்து மகிழ்ந்தான். நாடகம் நடந்து கொண்டிருந்தது. காட்சிகள் மாறி மாறி இடம் பெற்றுக்கொண்டே இருந்தன. லிங்கனின் வாழ்வின் காட்சிகளும் மாறிமாறி இடம் பெற்றுக்கொண்டே இருந்தன.

நாடகத்தை இரசிகர்கள் ஆவலோடு ரசித்துக்கொண்டிருந்த நேரத்தில், ஒருமுகம் மாடியில் பலகணி வழியாக எட்டிப் பார்த்து மறைந்ததை யாரும் கவனமாகப் பார்க்கவில்லை. எட்டிப் பார்த்து மறைந்த முகம் ஒரு வினாடி பார்வையைச் செலுத்திவிட்டு மறைந்துவிட்டது.

திரைகள் விழுவதும் மேலே செல்லுவதுமாக இருந்தன.

ஆபிரகாம் நாடகத்தை வெகுவாக ரசித்துக்கொண்டிருந்தார். மாடியின்மீது இருந்த தனி இருக்கைகளில் அமர்ந்திருந்த யாவரும் நடிப்புக்கலையில் தம் மனதைப் பதிய வைத்து நிகழ்ச்சிகள் மேடையில் தோன்றிய கவர்ச்சியில் தம் விழிகளைப் பதியவைத்துக் கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு வெடி சத்தம் காதைத் துளைத்தது. நாடகக் கொட்டகையே அதிர்ந்து நடுங்கிப் போய்விட்டது. அடுத்த வினாடி லிங்கனின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கி ரவை ஒன்று மின்னல் வேகத்தில் பாய்ந்தது. தொடர்ந்து, ரவையைப் பாய்ச்சிய கிராதகன் வில்லியம் வைக்ஸ்பூத் மாடியில் இருந்து மேடைமீது குதித்தான். வெறி கலந்த உரத்த குரலில், 'வஞ்சகர்களுக்கு இதுதான் முடிவு'—என்று கூவிக்கொண்டே அரங்கிலிருந்து மாயமாக மறைந்தான். தியேட்டருக்கு வெளியே திட்டமிட்டு தயாராக நிற்கவைக்கப்பட்டிருந்த குதிரையின்மீது தாவிப் பாய்ந்து குதிரையைத் தட்டிவிட்டான். காற்று வேகத்தில் குதிரைப் பாய்ந்தது. துரத்திப்பிடிக்க எவ்வளவோ முயன்றனர். ஆனால் அந்தக் குளம்புகள் தாவிய வேகம் மின்னல் வேகமாயிருந்ததால், பின் தொடர்ந்தவர்கள் பட்டபாடு பலன் அளிக்கவில்லை.

நெற்றிப்பொட்டில் பாய்ந்துவிட்ட துப்பாக்கிக்குண்டினால் நிலை குலைந்த லிங்கன் ஆசனத்தில் அப்படியே சாய்ந்தான். பக்கத்தில் அன்பொழுக பேசிக்கொண்டிருந்த லிங்கனின் மனைவி அதிர்ச்சிகொண்டு கதறிவிட்டாள். பதறிப் போய் லிங்கனின் மேனியை இறுகத் தழுவிக் கொண்டாள், அலறினாள். பதறினாள். பிதற்றினாள். செய்வதறியாது 'கோ'வெனக் கதறினாள். உதவியாளர்கள் ஓடி வந்து லிங்கனை எடுத்து அணைத்துப் பதறினர். செயலிழந்த லிங்கன் மூர்ச்சையானார். உடனே லிங்கனை அப்படியே தூக்கிக்கொண்டு அரங்கிற்கு வெளியே இருந்த வீடு ஒன்றில் அமர்த்தினார்கள். உடனடியாக வைத்திய சிகிச்சையும் அளிக்கப்பட்டன. கைதேர்ந்த டாக்டர்கள் பரிசோதித்து உடனடி சிகிச்சை செய்தனர். லிங்கனின் மூர்ச்சை தெளியவேயில்லை. உடனே அங்கிருந்து மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர். மருத்துவ மனையில் லிங்கன் சேர்க்கப்பட்டதும், அங்கே விசேஷ சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. கண்ணும் கருத்துமாக அவரது உடல் நிலை பரிசோதனை செய்யப்பட்டது. வினாடிக்கு வினாடி அவரது உடல்நிலைக் கவனிக்கப்பட்டது. எத்தனைவித மருத்துவங்கள் உண்டோ அவ்வளவும் செய்யப்பட்டன. வைத்திய நிபுணர்கள் விழிகளில் ஏக்கம் பொங்க, உள்ளங்களில் வருத்தம் நிறைய மிக மிகக் கவனமாகப் பார்த்தனர். ஆனால் பலன்? நேரத்துக்கு நேரம் லிங்கனின் உடல் நிலை மோசமாகிக் கொண்டுவந்ததேயன்றிபலன் ஏதும் தெரியவில்லை.

இரவு பூராவும் லிங்கன் வலியால் அவதியுற்றார் நெற்றிப் பொட்டில் பாய்ந்த குண்டு தலையைத் துளைத்துக் கொண்டு மூளையில் போய்ச் செருகிக் கொண்டது, சொல்ல முடியாத வேதனையால் லிங்கன் துவண்டு போனார். மேனிமுழுவதும் வாட, வாட தன்னை மறந்த நிலையெய்தினார். இரவு முழுவதும் லிங்கன் அமைதியின்றி அவதிக்கு ஆளானார். இரவு பூராவும் வலியுடன் போராடி போராடி சோர்ந்து போனார் லிங்கன், அரசு ஊழியர்கள் அடைந்த துக்கத்துக்கு அளவேயில்லை. தாளமுடியாத வேதனையால் துடித்தார்கள். தவித்தார்கள் லிங்கன் பிழைத்துவிடமாட்டாரா என ஆயிரமயிரம் வேண்டுதல்களை செய்து கொண்டிருந்தனர். ஆனால் லிங்கனின் நிலைமை கணத்துக்குக் கணம் மோசமாகிக் கொண்டே வந்தது. பற்பல நன்மைகளைச் செய்தவர்—படாடோபமின்றி அரசியல் பணியாற்றியவர் அடிமைத் தளையை உடைத் தெறிந்தவர்—அகிலத்துக்கெல்லாம் அருள் நிறைந்த வாழ்வைக் காட்டியவர்—அத்தகைய உத்தமன் இரவு பூராவும் உடல்நோக உள்ளம்நோக அவதிக்குட்பட்டு சிறுகச் சிறுக வலி விழந்து வாடி—வதங்கி — மறுநாள் காலை 7-20 மணியளவில் தனது கடைசி மூச்சினை சுவாசித்து நிறுத்தினார். அளவில்லா ஜோதியை அகிலத்துக்கெல்லாம் வாரி வழங்கி வந்த சுடர் அணைந்துவிட்டது. செய்தி அறிந்த அமெரிக்கா முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது. துயரத்தில் மூழ்கியது. துவண்டது. மக்கள் வெள்ளம் கரைகடந்த கண்ணீரைக் கடல் அலைகளாக வடித்தது. நீங்காத அடிமைத்தனத்தை நீத்த உத்தமனின்கேட்டு மரணம் நீக்ரோ குலமே கண்ணீர் குளத்தில் மூழ்கியது. இருள் நீங்கி ஒளிபவனி வரும் அந்த நேரத்தில்-உலகத்துக்கு ஒளி தந்த உருவம் இருளில் அடைந்துவிட்டது. சோகம்கப்பிய அந்த தினம் அமெரிக்க சரித்திரத்தில் கறைபடிந்த தினமாகிவிட்டது. உலகமே உள்ளம் நொந்து உருகி நிறவெறிக்கு முடிவுகட்டிய அந்த முல்லைமலர் வாடிவிட்டதை எண்ணி ஏக்கம்கொண்டு வாட்டம் கொண்டது. உலகத்துக்கு ஒரு ஒளிவிளக்காக அமைந்த மாவீரன்—சமுதாயத்தில் நறுமணம் கமழ பாடுபட்ட கடமை வீரன்—ஜனநாயகத்துக்கு இலக்கணம்வகுத்த அரசியல் மாமேதை — உலகத்திலிருந்து பிரிந்து அமெரிக்காவின் அழியாத ஜோதியாக மாறிவிட்ட தினமாகிவிட்டது அந்த 1865-ஏப்ரல் 14-ம் நாள்.

முன்போல்தானே?

[ஈ எஸ். பட்டப்பா]

'பாரதமாதா பவன்' அன்று கோலாகலமாக மீண்டும் திறக்கப்பட்டது! முதலாளிபட்டப்பா நாற்காலியில் அமர்ந்திருந்த காட்சி ஓர் சிற்றூணக்குட்டியை நினைவூட்டியது. அவர் தன்னுடைய வாழ்க்கையில் வஞ்சனையில்லாமல் பருத்து வளர்ந்திருந்த காரணத்தால் ஸ்டெஷல் நாற்காலி இரும்பினுல் செய்யப்பட்டிருந்தது.

மேஜையின் மணியைத்தட்டினுர்

ஓடோடி வந்தான் ஒரு சர்வர்!

"டேய் சதாசிவம் இன்னிக்கு ஓட்டலுக்கு நண்பன் முத்துச்சாமி வருகிருன், நீண்ட நர்ட்களுக்கப்புறம் வருகிருன் அல்லவா......" பட்டப்பா நிறுத்தினுர். ஏனென்ருல் இங்கே அவருடைய பார்வை சதாசிவத்தின் மீது கூர்மையாக விழுந்தது !இதற்குக் காரணம் வேறே இருப்பினும்! ஓர் சமயம் இந்த சதாசிவம் ஏதோ முதலாளியின் அளவுக்கு மீறிய அன்பின் காரணமாக ஏமாந்துமுறை தவறிவிட்டான்! அதாவது குட்டியும் புட்டியுமாக்கக்கொண்டு வந்து கொடுத்துவிட்டான்! ஆனுல் இப்பொழுது விழித்துக் கொண்டான்! அதன் பிறகு நடந்த சம்பவத்தில்... ...ஆம்...'உம்'.....பட்டப்பா கனைத்துக்கொண்டு மேலே சொல்ல ஆரம்பித்தார் 'அவன் ஏற்கனவே காந்தியவாதி! தூய கதர்த் துணிகளைத் தவிர வேறென்றையும் கட்டத் தெரியாதவன்! சுதந்திரக் காலப் போராட்டங்களின் போது அவனுக்கு உலகமே புரியவில்லை! வெள்ளைக்காரர்கள் ஆள்வது சரிதானே என்னவோ என்ற தயக்கம் அவனுள்ளே ஆழமாக இருந்தது. காந்தியை ஒன்றும் தெரியாத அப்பாவியென்றும், மொத்தத்தில் வியாபாரிகட்குச் சத்துரு என்றும் எண்ணினுன்! என்னமோ அறிவில் பிற்காலத் திருப்பம்—ஓர் உறுத்தலைக் காட்ட, கதரும், காந்தியமுமாகத் திகழ ஆரம்பித்துவிட்டான்! சிறைச்சாலை அனுபவம் சிறிது ஏற்படவில்லையே என்ற ஏக்கத்தைக் காங்கிரஸ் சர்க்கார் ஏற்படுத்திவிட்டது. அப்படிப்பட்ட அவனும் அவனுடைய மனைவியும் வருகிருர்கள். நம்ம ஓட்டலில்தான் தங்கப்போகிருர்கள். ஒரு வாரத்துக்கு மேல் இருப்பார்கள்! இடவசதி, சாப்பாட்டு வசதிகளைக் கவனித்துக்கொள்!" என்று கூறி வேறு ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனுல் அது இப்பொழுது பெரிய பிரச்சினையில் முடிந்துவிட்டால் என்ன செய்வது என்று பயந்து, நீ போகலாம்!" என்ருர்.

சதாசிவம் சென்றுவிட்டான்!

பட்டப்பா தீவிர சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார். இந்தப் பாரத மாதா பவனின் முதலாளியாக அவர் ஆவதற்கு முன் எந்த நிலையில் இருந்தார்? ஒருகணம் அவருடைய சிந்தனை பின் நோக்கிச் சென்றது. அதிலே பொதிந்திருந்த ஆழமான கருத்துக்களின் சுவையான வரலாறு தான் இது!

சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்னே ஓர் சிறுவன், தமிழகத்தில் ஒரு நாடோடி! எங்கே பிறந்தான், யாருக்குப் பிறந்தான் என்பது யாருக்கும் தெரியாது. பின் அது யார்? அவன் யாரோ பெற்று வீசி எறியப்பட்ட அனுதைக் குழந்தை! எப்படியோ பால் உண்ணக் கொடுத்து வைத்திருந்தாலும்இந்த 'அனுதைத் தனம்' அவனை வளர்த்தவர்களை நீடித்து வளர்க்கவில்லை! அதோடு அவர்கள் உயிர் வாழவும் முடியாத வறுமை. பிறகு என்ன? வறுமை, வளர்த்த இருவர்களின் உயிரையும் குடித்தது, பட்டப்பா அனுதையானுன்!

அதன் பிறகு ஊர்சுற்ற ஆரம்பித்த அவன் தமிழகத்தில் ஓர் நாடோடி!

'கெட்டால் பட்டணம் சேர்!' என்பது பழமொழி! எனவே பட்டப்பா பட்டணம் வந்து சேர்ந்தான்! ஆங்காங்கே தின்னனுமே அதெல்லாம் தின்றுத் தீர்த்தான்!

சிறியதாக ஓர் தேநீர்க் கடை வைத்தான்! வியாபாரம் பெருகியது. ஆள் கொஞ்சம் 'பர்சனுலடி'யாக வளர்ந்தான்!

ஓர் நாள். ஏதோ ஒரு சினிமாவுக்கு உயர்ந்த வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தான்! அன்றையதினம் அதே வகுப்புக்கு ஒருத்தி வந்திருந்தாள்!

அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருமே இல்லை! எனவே ஒருவரையொருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள்.

பட்டப்பாவுக்கு அது புது அனுபவம். ஆனுல் அவளுக்கு மிகவும் பழசு! கொஞ்சம் சிரித்தாள்! அவன் அந்தச் சிரிப்பிலே சொர்க்கத்துக்கே சென்றுவிட்டான்!

பிறகு அவனை அருகே வருமாறு அழைத்தாள். அவன்தான் புதியவனுயிற்றே! தயங்கினுன். அவளே அருகில் வந்து உட்கார்ந்தாள்.

'நீங்கள்!' பட்டப்பா தடுமாறினுன்

'இந்திராபாய்!'

'பெயரைக் கேட்கவில்லை! உம்... தயங்கினுன் பட்டப்பா! அவனுக்கு ஏதோ சொல்லவேண்டுமென்று இருந்தது. ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அதற்குள் பழக்கப்பட்ட இரண்டு கரங்களாலும் அவனைச் சேர்த்தாள்!

அது ஆங்கிலப் படம்!

ஆனுல் அவர்கள் இருவரும் நடத்தியது ஆங்கில ரசம்!

காட்சி முடிந்தது.

இந்திராபாய் அவனுடன் வர ஆரம்பித்தாள்.

'நீ......!'

'என்ன?'

'ஒன்றுமில்லை!'

'உங்களோடு வருகிறேன்!' வட இந்தியாவில் பிறந்தவளாக இருந்தாலும் தமிழ் மட்டும் மிகவும் அழகாகப் பேசினுள்! பிழைக்க வேண்டுமே!

'சரி!' என்று கூறி பட்டப்பா அவளைத் தன்னுடன் அழைத்துப் போனுன். அன்று அவளுக்கும் அவனுக்கும் நல்ல உணவு! இந்திராபாய்க்கும் மிக்க மகிழ்ச்சி!

ஆனுல் இது இன்ருேடு 'குளோசாகி விடுமோ' என்று எண்ணும் போது அவள் மீண்டும் இருண்ட

4-ம் பக்கத் தொடர்ச்சி

அது புலியல்ல — பூனை என்று ஜெகஜீவன்ராம் கூறிவிட்டார்! பூனைகூட அல்ல பூனைபோன்ற பொம்மை என்று காட்கில் கூறிவிட்டார்!

காமராஜர் புலி என்று கூறுகிறார்!

புலி என்று கூப்பாடு போட்டு, ஊரைக் கூட்டி— தன் வயிற்றுப் பிழைப்புக்கு வழிதேட முனைகிறார்!! அரசியலில் வேதனையான விளையாட்டு விளையாட நினைக்கிறார் அந்த மேதை!

"நெல் கொள்முதல் விலையை உயர்த்தித் தரவேண்டும்! ஆந்திரமாநிலத்தில் தரும் அளவாவது இங்கே நெல்லுக்குக் கொடுக்கப்பட வேண்டும்;

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகள் மாநாடு நடத்தவேண்டும்; பிறகு ஒவ்வொரு கலெக்டர் ஆபிஸ்முன்பும்விவசாயிகள் அட்டை ஏந்திப் போராடவேண்டும்!

அதன் பிறகு மாநிலப் பிரதிநிதிகள் சென்னையில் மாநிலமாநாடு நடத்தவேண்டும்.

கோட்டை முன்பாக விவசாயிகள் அட்டையேந்திப் போராடவேண்டும்,

இதற்கு நீங்கள் தயாரா? போராடத் தயாரா?

வேலூர்-கோட்டைத்திடலில் இன்னமும் தெளிவு பெருத மயக்கத்தில், மாய்கையில் மூழ்கிக் கிடக்கும் சில பேரை கூட்டிவைத்துக் கொண்டு 'தயாரா?' என்று கேட்டிருக்கிறார் காமராசர்! போராட்டத்துக்கு!!

தென் சென்னைத் தொகுதி தேர்தல் கூட்டத்தில் பேசும்போது 'என்ன ராமசாமி ராஜிஞமா செய்துவிடுவீர்கள் இல்லையா? என்று கேட்டாரே, அதுபோல!!

ராமசாமி புன்சிரிப்பால் பதில் தந்தார், காமராசரைப் புரிந்துகொண்டு! மாய்கையில் உழல்வோர் 'தயார்! தயார்!" என்றே குரல் கொடுத்தார்களாம்!

நெல்லுக்கு விலை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்பதற்காகப் போராட அழைத்திருக்கிறார்! ஆக்ரோஷத்துடன்!!

கலெக்டர்கள் அலுவலகம் முன்பும் கோட்டை முன்பும் கூடி நின்று கொடியேந்தி தடியேந்தி, அட்டையேந்தி—சட்டியேந்தி நின்று குரல் கொடுக்கப்போகிறாராம் காமராசர்—கூப்பிடுகிறார்!

புலியைச் சுட்டுத் தள்ளவாரீர் என்பதுபோல அழைக்கிறார்!

புலியின் உடலில் 20 சதவீதத்தை மட்டுதான் சுட்டுத்தள்ள அழைக்கிறார்; காமராசர். மீதியுள்ள 80 சதவீதப் பகுதி எப்படியாவது நடமாடட்டும் என்றஎண்ணமாகக் கூட அருக்கக்கூடும்!

கொள்முதல் நெல்லுக்கு விலை உயர்வு தேவை என்றால் புலியின் உடலில் 20 சதவீதத்தை மட்டும் சுட்டுத் தள்ளு என்பதுபோல்தானே!

—அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய உத்திரவிட்டிருப்பது 20 சதவீதம்தானே. 80 சதவீத நெல்லை இஷ்ட விலைக்கு விற்றுக்கொள்ள அனுமதித்திருக்கிறதே அரசு!

கணக்குப்புரியாமலா காமராசர் போராட அழைக்கிறார்? ஒன்றிரண்டு ரூபாய்கள் 20 சதவீதத்துக்கு மட்டும் குறைத்து விற்பதால் ஏற்படும் இழப்பை மீதியுள்ள 80 சதவீதத்தின் மீதும் ஏற்றி வைத்து விற்றுக்கொள்ள முடியும் என்ற கணக்குப் புரியாமலா இருக்கிறார் காமரார்!

காமராசருக்குப் புரிகிறது!

இதுவரை விவசாயப்பெருங்குடி மக்களுக்குக் கிடைத்து வந்த வாய்ப்பு, வசதிகள் மிகுதிப்படுத்தப்பட்டுவிட்டு—

முன்னைய அரசாங்கத்தைக் காட்டிலும் தற்போதைய அரசாங்கத்தால், விவசாயக் கடன் வசதிகள் தாராளமாக—எளிதாக—சிக்கல் அற்றதாக—ஆக்கிக் கொடுக்கப்பட்டு—

இதுவரை உற்பத்தி செய்து வந்த உற்பத்தி அளவை அரசின் உதவியோடு பல சதவீதம் உயர்த்தி உற்பத்திசெய்துவிட்டு—

வாழ்க்கையின் கோரத் திருக்காட்சியை நினைத்துப் பார்க்கலானாள்.

ஆனால் அன்றிரவு பட்டப்பா சொல்லிவிட்டான்! 'இந்திராபாய், நம் இருவருக்கும் கலியாணம்தான்! இனி நீ உன் தொழிலை மறந்துவிடு!' என்று.

இந்திராபாய் அவனைக் கடவுளாகவே எண்ணிமணந்துகொண்டாள்.

இல்லறம் வெகு ஜோராக நடந்தது. குழந்தைகள் பிறந்தன.

இந்த சமயத்தில்தான் தேநீர்க் கடை' 'பாரத மாதா பவனாக' ஆகியது.

அப்பொழுதுதான் வர்ணக் கடை முத்துச்சாமியின் சிநேகம் கிடைத்தது. முத்துச்சாமியின் கதையும் ஏறக்குறைய பட்டப்பாவின் கதைதான்!

ஒருவர்க்கொருவர் போய் வந்து கொண்டிருக்கையில் ருசிகளிலும் மாற்றங்கள் நடந்தன!

அந்த விஷயத்தில் அவர்களுடைய மனைவியர் பழக்கப்பட்டவர்களாயிற்றே!

இது நடந்துக்கொண்டிருக்கும் பொழுதுதான் சதாசிவம் ஏமாந்து போனதும்!

அன்றுஏனே பாரதமாதா பவனில் 'ஸ்ட்ரைக்' நடக்க ஆரம்பித்தது!

பட்டப்பா தலைமறைவாகிவிட்டார்.

பிறகு நீண்டகால வாழ்க்கைப் போராட்டத்திற்குப் பிறகு இதோ பாரதமாதா பவன் திறக்கப்பட்டிருக்கிறது! முத்துச்சாமியும் வரப்போகிறான்! வரவேற்பு? முன்போல் தானே!

விரைவில்! புதிய தொடர்கதை!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

'கண்ணைத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

இதுவரையில் தாங்கள் உற்பத்தி செய்த அளவுக்குப் பெற்றுவந்த வருவாய் அளவைக் காட்டிலும் அதிக உற்பத்திக் காரணமாக வருவாயின் அளவு அதிகமாக இருக்கக் கண்டுவிட்டு—

வேலூருக்கு ஓடிவந்து கொள்முதல் விலையை உயர்த்திக்கொடுங்கள் என்று கேட்கிற காமராஜருக்கு நிலைமைகள் நன்கு புரிகின்றன—எதிர்காலம் புரிகிறது! எதிர்கால ஏற்றம் தெரிகிறது–அதிலே தங்கள் அழிவும் தென்படுகிறது!

அங்கலாய்ப்பு பிறக்காதா? ஆத்திரம் மேலிடாதா? நாடு பல்வளமும் பல்கி, நாட்டவர் சுபிட்சமடைந்து விடலாமா? அப்புறம் தங்கள் அரசியல் அங்காடிச் சரக்கு விலைபோகுமா?

விசாரம் ஏற்படாதா? வேதனை பிறக்காதா?

போராடத் தயாரா? அட்டையேந்தி வந்து கோட்டைமுன் நின்று குரல்கொடுக்கத் தயாரா? — கேட்கிறார் இப்படி!

கொள்முதல் விலை நிர்ணயம் நியாயமானது—என்று ஜெகஜீவன்ராம் கூறிய பின்னரும்—நெல்லுக்குக் கொள்முதல் விலையை உயர்த்திக்கொடுத்தால் அதில் பொருளாதாரச் சிக்கல்கள் புதிதாகக் கிளம்பும் என்று திட்டக்குழுத் துணைத்தலைவர் காட்கில் அறிக்கை வெளியிட்டதற்கு அப்புறமும்—

தமிழகத்தில் வந்து சிலபேரை கூட்டிவைத்துக் கொண்டு விலையுயர்வு தாருங்கள் என்று குட்டை குழப்புகிறார் என்றால்,

விவசாய மக்களது நலன்பேணி இப்படிப் பேசுகிறாரா?

அல்லது,

அடுத்து நடைபெறப்போகும் காங்கிரசுத் தலைவர் பதவிக்குத் தன்னைத் தேர்ந்தெடுக்கப் போகிறீர்களா? இல்லையா?

என்று மத்திய அரசை அச்சுறுத்துகிறாரா?

காமராசர் அரசியல் விளையாட்டு விளையாடத் தொடங்கிவிட்டார் என்று விளக்கமாகப் புரிகிறது நமக்கு!

துடிப்புள்ள இளம் ரத்தமே காங்கிரஸ் தலைமைப் பதவிக்குத் தேவை என்ற பிரதமர் இந்திரா அம்மையாரின் பேச்சிலிருந்து விளையாட்டு தொடங்கிவிட்டது!

தலைமைப் பதவிக்குக் காமராசர் கூடாது என்ற பாட்டிலின் எண்ணம், உடனடியாக மாறுபட்டு காமராசரைச் சந்திக்க வந்ததில் அரசியல் விளையாட்டுதெரிகிறது!

காங்கிரஸ் தலைவர் தேர்தலுக்கு அப்புறம்தான் அமைச்சரவையில் மாறுதல் என்ற பிரதமரின் பேச்சிலிருந்து—காமராசரது விளையாட்டு புலனாகிறது!

மத்திய அமைச்சரவையில், கழக அரசாங்கம், நல்ல பெயரோடு, நம்பிக்கையூட்டும்வகையில் இயங்கி வருவதிலிருந்து — காமராசரது அரசியல் விளையாட்டு புலப்படுகிறது!

விவசாயிகளோடு தன்னை இணைத்துக்கொண்டு விளையாட நினைக்கிறார் காமராசர்!

அதிக வருவாய் வேண்டும் என்று கூறினால் யார் தான் வேண்டாம் என்பார்கள். இத்தனைப் பெரிய மனிதரே முன்வந்து நின்று கூறுகிறாரே! கொஞ்சம் அனுபவிப் பார்ப்போம்! என்று நினைக்காமல் யாராலும் இருக்க முடியுமா?

எனவே, கூறுகிறார்! கணக்கைப் புரிந்துகொண்டு கூறுகிறார்!

தமிழகத்தில் மீண்டும் காமராசர் செல்வாக்குப் பெறமுடியுமா? என்பது வேறு பிரச்சினை! இழந்த செல்வாக்கு மீளுமா என்பதும் அப்படித்தான்!

மத்திய அரசை எச்சரிக்க முனைகிறார் — உனக்கு எதிராக நான் செயல்படத் தொடங்கிவிட்டேன் என்று!

பிரதமரை எச்சரிக்கிறார்!
உணவு அமைச்சரை எச்சரிக்கிறார்!
திட்டக் குழுவை எச்சரிக்கிறார்!

தமிழகத்தில் அமைந்துள்ள புதிய கழக அரசாங்கத்தின் திட்டங்கள் மூலம் விவசாயப் பிரச்னைகள் தீர்ந்துவிடும்! தமிழகத்தின் உணவுப் பிரச்னை சமாளிக்கப்பட்டுவிடும்!

தமிழகத்தின் உணவுப் பிரச்னையும், விலை உயர்வுப் பிரச்னையும் சமாளிக்கப்பட்டுவிட்டால்—அதுவும் கழக அரசாங்கத்தால் சமாளிக்கப்பட்டுவிட்டால் — வருங்காலத்தில் காங்கிரஸ் இருக்கவே முடியாது! — இந்த நிலைமை பிற மாநிலங்களையும் தொற்றிக்கொள்ளும்!

இவைகள் தீரஇயலாதவாறு மத்திய அரசு செயல்பட்டுத் தீரவேண்டும்! அதற்கு நான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்!

காமராசர் வாய்விட்டு சொல்லாதவை! புலி புகுந்துவிட்டது போராட வாரீர் என்ற அழைப்பிலே பொதிந்துள்ள உண்மைகள்!

பிரதமருக்கும் — காமராசருக்கும் ஏற்பட்டுக் கொண்டு வருகிற இடைவெளியின் அளவை விளக்கிக் காட்டும் எடுத்துக்காட்டுகள்!

தீர்மானம் நிறைவேற்றி வைத்திருக்கிறதே த. நா. கா. க.—சட்டம் — ஒழுங்கு — அமைதி தமிழகத்தில் கெட்டுவிட்டதென்று! அதனை நிரூபித்துக்காட்ட மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கைகள்!

அரசியல் பசிக்கு அமைதிச் சூழலை' ஆகுதி கேட்கிறார் காமராசர்! புலியைப் பொசுக்க வாரீர் என்கிறார்!!

காமராசரது அரசியல் விளையாட்டோடு — நாட்டு மக்களது அமைதி வாழ்க்கை பிணைக்கப்படுகிறது.

காமராசருக்கு இல்லாதிருக்கலாம் ராஜதந்திர நோக்கு!

அறிஞர் அண்ணாவின் ஆற்றலை அனைத்துலகும் ஆடிப்பாடிக்களிக்கத் தொடங்கிவிட்டது — அதனால் தமிழக அரசுக்கு இல்லையென்று கூறமுடியுமா?

காமராசருக்கு இல்லாதிருக்கலாம்–மனச்சாட்சி!

உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் அதிக வருவாய் கிடைக்க வழியில்லை என்று கூறும் அளவுக்கு விவசாயப் பெருங்குடியினருக்கு இல்லையென்று கூற முடியுமா?

படியரிசித் திட்டத்தைச் சீர்குலைக்கவும், நாட்டின் நிறைவை—வாழ்வைத் தடுத்து நிறுத்தவும் — மத்திய அரசை எச்சரிக்கவும் விலை உயர்வுக் கோரிக்கை' துருப்புச் சீட்டாக — விளையாட்டுக் கருவியாக ஆகி இருக்கிறது!

தமிழகம்; அரிசிவிலைக் குறைப்பை மையப் புள்ளியாய் வைத்துக்கொண்டு. இயன்றவரையில் தன்னாட்டு உற்பத்திப் பண்டங்களின் விலைக் குறைப்புக்கு வழிவகை செய்துகொண்டும், வழிவகை தேடிக்கொண்டு மிருக்கிற வேளை இது.

ஒரு நிலையான தன்மையில் அரிசிவிலை நிறுத்தப்பட்டு விடுமானால், பிற பல பண்டங்களின் விலைகளை ஓரளவாவது மட்டுப்படுத்திவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ஏதுவுண்டு என்ற நம்பிக்கையில் தமிழகம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது.

விலை உயர்ந்துவிட்டது, விலை உயர்ந்துவிட்டது என்று விலையை உயர்த்தி விற்க வழிகாட்டிக் கொடுத்

தவர்கள்-மேடையேறி வந்து பேசுவோர், ஒன்றிலிருந்து ஒன்று என்ற அடிப்படைத் தத்துவத்தை ஒப்புக்கொள்ளாதவர்களாய், 'விலையை உயர்த்திக்கொடு' — என்று ஒரு பொருளுக்காகப் போராட்டக் குரல் கொடுப்பதை எந்த அடிப்படையில் என்பதை நண்பா, உன்னால் புரிந்துகொள்ள முடியும்.

உனக்குப் புரிந்தாலும். புரியாதவர்களாய் தங்களைக் காட்டிக்கொள்வோர் சில இருக்கிறார்களே, அவர்களுக்காகவாவது எடுத்துக்காட்டவேண்டாமா?

தமிழக அரசு—அறிஞர் அண்ணாவின் அரசு விலையைக் குறைக்க முயன்று வருகிறது; இதே வேளையில் பணவீக்கத்தை உண்டாக்கத்தக்க வகையில் மைய அரசு ரூ. 90-கோடிக்கு புதிதாக நோட்டுக்கள் அச்சடித்து வெளியிடத் துணிவுகொள்கிறது என்றால் அந்தத் துணிவின் உட்பொருள் காமராசருக்குப் புரியாமலா இருக்கிறது?

விவசாயப் பெருக்கத்திற்குரிய காரியங்களில் தமிழகம் அதிதீவிரமாக ஈடுபட்டிருந்தவேளையிலேதான் உரவிலையை உயர்த்தியது டில்லி.

இந்நடவடிக்கை, தீவிர உற்பத்தியைப் பாதிக்கும்—விவசாயிகளது உற்பத்திச் செலவை உயர்த்திவிடும் என்பதை காமராசர் அறியாமலா இருந்தார் — இருக்கிறார்?

டில்லியைப் பார்த்து—உரவிலையை உயர்த்தாதே என்று கூற திராணி இல்லை — உரவிலை உயர்வைக் குறையுங்கள் அல்லது உதவித் தொகை தாருங்கள் என்று இன்னமும் போராடிக்கொண்டிருக்கும் கழக அரசின் தலைமைச் செயலகம் முன்பு அட்டையேந்திவந்து போராடப் பார்க்கிறார் என்றால், அவரது தீர்க்கதரிசனம், மக்கள் நலன்மீதா? பதவிவெறி—தலைமைப் பித்துமீதா? என்றுதானே கேட்க முடிகிறது!

இதனையெல்லாம் அறிவார்ந்த மக்கள் அலசிப் பாராமலா இருக்கப்போகிறார்கள். அனைந்திந்திய காங்கிரசின் தலைவர் தேர்தலுக்குப் பிறகு காமராசரது முகவரி தேடிப்பார்க்க வேண்டியதாகத்தான் இருக்கும் என்பதை விவசாயப் பெருங்குடியினர் புரிந்துகொள்ளாமலா இருக்கிறார்கள்?

காமராசர் அரசியல் வாதி—அதனால்
அரசியலில் விளையாட்டுக் காட்டுகிறார்!

நாம் அறிவாளர்களாக இருப்போம் —
அறிவோடு ஆராய்வோம்! அறிவுத் தெளிவோடு இயங்குவோம்!

அண்ணா அவர்களது ஆணை வழி நடையிடுவோம்!

அப்புறம் பாரேன்! அரசியல் விளையாட்டு-அந்திம விளையாட்டாகப் போவதை! பார்க்காமலா இருக்கப் போகிறோம், தமிழகத்துக்குப் புதியவர்களா நாம்? இல்லையே!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

கோவை மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை

நம் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் இந்த ஆலையில் 20, 30, 40, 2/20, 2/30, 2/40 முதலிய நம்பர்களில் நேர்த்தியான நூல்கள் தயாரிக்கப்பட்டு மலிவான விலையில் தரப்படுகின்றன. சிறந்த முறையில் நடந்துவரும் இந்த ஆலைக்கு இப்போது மேலும் பங்குகள் சேர்க்கப்படுகின்றன. பங்குகள் வேண்டுபவர்கள் விவரங்களுக்கு ஆலையின் முகவரிக்கு கடிதம் எழுதவும்.

நிர்வாகத்தினர்.

தபால் பெட்டி-8

தாராபுரம்.

கோவை மாவட்டம்

வலியா? ஜலதோஷமா?

பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

அமிர்தாஞ்சனம்

உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

வலிகளுக்கு: தலைவலி, நீர்வலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்: சாதாரண ஜலதோஷமானால் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானால், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும். அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

AM/3769

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.